# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.37/2019**
**PW5**

| | | |
|---|---|---|
| Name | : | தேவராஜ் |
| Father's Name | : | கருப்பன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.07.2025.

A1,2, 4 to 17 present.

**முதல் விசாரணை**

நான் அஸ்வநாதசுரனை கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இதற்கு முன் அஸ்வநாதசுரனை கிராம தலைவராக இருந்தேன் . சுமார் 10 வருடத்திற்கு முன் தாலுகா காவல் நிலையத்திற்கு நான் எங்கள் ஊர் பிரச்சினைக்காக சென்றபோது போலிசார் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் கையொப்பம் பெற்றார்கள். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலும் , கைப்பற்று மகசரிலும் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் . அதை நான் காவல் நிலையத்தில்தான் போட்டேன் . இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிஸ் விசாரணையில் கடந்த 02.05.2013 ம் தேதி நானும் எங்கள் ஊர் அண்ணாமலை என்பவரும் திருவண்ணாமலை - செங்கம் சாலையில் இருசக்கர வாகனத்தில் அத்தியந்தல் ஏரிக்கரையி ல் காலை 9 மணிக்கு வந்தபோது , திருவண்ணாமலை கிராமிய காவல் நிலைய காவல் ஆய்வாளர் அன்று காலை 1 மணிக்கு அந்த இடத்தில் டாரஸ் லாரி எதிரிகளால் எரித்து வேறுறொரு நபர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும், அண்ணாமலையிலும் கையொப்பம் இட்டுவிட்டு , அந்த இடத்தில் இருந்து உடைந்த நிலையில் இருந்த பீர் பாட்டில்கள் 3, லாரியின் இரும்பு கைப்பிடி பாகம் 1, கண்ணாடி சிவப்பு நிற டார்ச் லைட் , ஆகியவற்றை ஒரு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் , அதில் நானும் அண்ணாமலையும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு , தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.